**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 107 /2018**

**Deposition of P.W. 5**

Name : சதீஷ்
S/o, D/o, W/o : தாணுபிள்ளை
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**Dated: 25.09.2024**
**Accused Present.**

**முதல் விசாரணை–**

நான் பூக்கடையில் வசித்து வருகிறேன். நான் கொத்தனாராக வேலை பார்க்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரியையும் தெரியும். நானும், சாட்சி செந்திலும் பூக்கடையிலிருந்து வந்து கொண்டிருந்தோம். அப்போது நெல்லிகுற்றிபாறை, அம்மன் கோவில் அருகே அ.சா.1ற்கும், எதிரிக்கும் இடையே பிரச்சனை நடந்தது. அ.சா.1–யிடமிருந்து எதிரி ரூ.200/– எடுத்துள்ளார். எடுத்த ரூபாயை கொடுக்காததால் பிரச்சனை நடந்துள்ளது. எதிரி கையில் வெட்டுக்கத்தி வைத்திருந்தார். அ.சா.1 எதிரிமீது புகார் கொடுப்பேன் என்று சொன்னதும் நீ உயிரோடு இருந்தால் தானே புகார் கொடுப்பாய் என்று சொல்லி வெட்டினார். அ.சா.1ற்கு இடது கையில் காயம் பட்டது. ஆட்டோவில் அ.சா.1ஐ மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எல்லுருட்டி பாறை அருகே வேறு வீடுகளும் உள்ளன. கடைகளும் உள்ளன. இவ்வழக்கின் எதிரியை சம்பவத்திற்கு முன்னர் தெரியாது. அ.சா.1ஐ–யும் எனக்கு சம்பவத்திற்கு முன்னர் தெரியாது. அவர்களுக்குள் என்ன தகராறு என்றும் எனக்குத் தெரியாது. சத்தம் கேட்டு தான் அங்கு போனேன். நான் போகும் போது வெட்டு முடிந்து விட்டது என்றால் சரியல்ல. ரத்தம் தரையில் பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1ன் துணிகளில் ரத்தம் பட்டது. வெட்டுக்கத்தி ஒரு முழம் நீளம் இருக்கும். கையில்குறிப்பாக எந்த இடத்தில் வெட்டு பட்டது என்று தெரியாது. நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கும், எனது வீட்டிற்கும் ½ கி.மீ தூரம் இருக்கும். சம்பவ இடத்தில் உள்ள நபர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். பெயர் தெரியாது. நான் அ.சா.1 உடன் காவல்நிலையம் செல்லவில்லை. சம்பவ இடத்திற்கு போலீசார் வரவில்லை. சமபவம் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.